# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2075/26 - 2018 ජුනි මස 13 වැනි බදාදා - 2018.06.13

*2075/26 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பான நடைமுறை விதிகள்**

அரசியலமைப்பின் உறுப்புரை 155 ஊஊஊ இன் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகள்.

பீ. எச். மனதுங்க,
தலைவர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு,
கொழும்பு,
2018, யூன் 11.

விதிகள்

1. இவ்விதிகள் 2018, மே 08, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதன் பிரகாரம், பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பான நடைமுறை விதிகள் என அழைக்கப்படும்.

2. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவானது, பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு அல்லது நியமனம் அல்லது தெரிவுசெய்தல் ஆகியவற்றிற்கான நேர்முகத் தேர்வுக் குழுக்களின் தலைவர்/ தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்யும்போது, அத்தகைய தேர்வுக் குழுக்களுக்கான தலைவர் ஒருவரை நியமனம் செய்யலாம்.

3. மேலே விதி (02) இலுள்ள ஏற்பாடானது, பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் நியமனம் தொடர்பாக ஏலவே உள்ள விதிகள் அல்லது நடைமுறை விதிகள் என்பவற்றிற்கு முரணாகாத வகையில் ஏற்புடைத்தாக்கப்படும்.

06-1016


1A - PG 4078 — 107 (2018/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.